A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 64 / 2023**

திருமதி V. சிவபாக்கியம்,
க/பெ. வெள்ளைசாமி,
க.எண். 4/323, வடக்கு களம்,
சொக்கம்பட்டி, அயன்பொருவாய்,
திருச்சி மாவட்டம் – 631 308. ………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு P.ஆனந்தன்)

எதிர்

1) செயற்பொறியாளர்/ இ&கா/ மணப்பாறை,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
729, 4, மணப்பாறைப்பட்டி ரோடு, மணப்பாறை அஞ்சல்,
மணப்பாறை, திருச்சி – 621 306.

2) உதவி செயற்பொறியாளர்/ இ&கா / துவரங்குறிச்சி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துவரங்குறிச்சி SS, மணப்பாறை ரோடு,
துலுக்கம்பட்டி, துவரங்குறிச்சி, திருச்சி – 621 314.

3) உதவி மின்பொறியாளர்/ இ&கா / பாலக்குறிச்சி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
7/70, வடக்கு தெரு, பாலக்குறிச்சி,
மணப்பாறை, திருச்சி – 621 308.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு R. அன்புசெல்வன், செயற்பொறியாளர்/ இ&கா/ மணப்பாறை
திரு J. ஜான் பீட்டர், உதவி செயற்பொறியாளர்/ இ&கா / துவரங்குறிச்சி
திரு P. வெள்ளைசாமி, உதவி மின்பொறியாளர்/ இ&கா / பாலக்குறிச்சி)

**மனு பெறப்பட்ட நாள்: 23-08-2023**

**கேட்புரை நாள்: 19-10-2023**

**ஆணை நாள்: 06-11-2023**

23.08.2023 அன்று பெறப்பட்ட திருமதி V. சிவபாக்கியம், க/பெ. வெள்ளைசாமி, க,எண். 4/323, வடக்கு களம், சொக்கம்பட்டி, அயன்பொருவாய், திருச்சி மாவட்டம் – 631 308 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 64/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 19.10.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

தனது வீட்டிற்கு புதிய மின் இணைப்பு வழங்க கோரியும் மற்றும் உரிய இழப்பீடு வேண்டியும் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 தனது வீட்டிற்கு புதிய மின் இணைப்பு வேண்டி இணையதளம் மூலம் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 புதிய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்த விண்ணப்பத்தின் அடிப்படையில் உதவி பொறியாளர்/இ&கா/பாலகுறிச்சி மதிப்பீட்டு தொகை செலுத்துமாறு மேல்முறையீட்டாளருக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டதாகவும், மேல்முறையீட்டாளர் மதிப்பீட்டுத் தொகை செலுத்தாத காரணத்தால் அவரது விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 புதிய மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் திருச்சி மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 20.04.2023 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திருச்சி மின் பகிர்மான வட்டம் 29.05.2023 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில்

அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>

3.1 திருச்சி மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 29.05.2023 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"மன்றத்தின் தீர்வு:*
>
> *மன்ற விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது மனுதாரர் திருமதி V சிவபாக்கியம் சார்பாக ஆஜராகிய திரு ஆனந்தன் அவர்கள் மன்றத்தை மதிக்காமல் வெளிநடப்பு செய்தது மிகவும் கண்டிக்கத்தக்கது. இருதரப்பு சாட்சிகளையும் ஆவணங்களையும் பார்வையிட்ட மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் திருச்சி மாவட்டம், மணப்பாறை தாலுக்கா அயன்பொருவாய் சொக்கம்பட்டி வடக்கு களம். கதவு எண் 4/33 என்ற முகவரியில் உள்ள வீட்டிற்கு மின் இணைப்பு கோரி மனுதாரர் திருமதி V.சிவபாக்கியம் அவர்கள் 26.08.2021-ல் இணையதளம் மூலம் விண்ணப்பம் பதிவு செய்து (விண்ணப்பப் பதிவு எண் 200062540821341) விண்ணப்பக் கட்டணம் ரூ.3,018/- செலுத்திய நிலையில் மின் இணைப்பு பெற மதிப்பீட்டுத்தொகை ரூ.16,208/-யை செலுத்துமாறு அறிவிப்பு கடிதம் மூலமாகவும் மனுதாரருடைய அலைபேசி எண்ணுக்கு சரியான விண்ணப்பப் பதிவு எண்ணுடன் குறுஞ்செய்தி மூலமாகவும் தகவல் அனுப்பிய பிறகும் மனுதாரர் மதிப்பீட்டுத் தொகையினை செலுத்த தவறிவிட்டார்.*
>
> *இந்நிலையில், அறிவிப்புக் கடிதத்தில் தட்டச்சு பிழையினால் தவறாக குறிப்பிடப்பட்டிருந்த விண்ணப்பப் பதிவு எண்ணாலே மனுதாரரால் மதிப்பீட்டுத் தொகையினை செலுத்த இயலவில்லை என திருஆனந்தன் அவர்கள் கூறுவதை ஏற்க முடியாது. வாரிய விதிகளின் படி, மதிப்பீட்டுத் தொகையினை மனுதாரர் செலுத்த தவறியதால் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டுவிட்டதாக எதிர்மனுதாரர் கூறுவது ஏற்புடையதே. மேலும், விசாரணையில் மனுதாரர் சார்பாக ஆஜராகிய திரு.ஆனந்தன் அவர்கள் மனுதாரர் எவ்வித மதிப்பீட்டுத்தொகையும் செலுத்த மாட்டார் எனவும் வாரிய செலவில் மனுதாரருக்கு மின் இணைப்பு வழங்க வேண்டும் எனவும் கூறுவதை ஏற்க இயலாது.*
>
> *எனவே, மனுதாரர் திருமதி V சிவபாக்கியம் அவர்கள் தன்னுடைய வீட்டிற்கு மின் இணைப்பு கோரும் பட்சத்தில் புதிதாக இணைய தளத்தில் விண்ணப்பம் அளித்து விண்ணப்பக் கட்டணம் மற்றும் அதற்கான தற்போதைய மதிப்பீட்டுத் தொகையினை மனுதாரர் செலுத்தும்பட்சத்தில் அவருடைய வீட்டிற்கு மின் இணைப்பு வழங்கலாம் என எதிர்மனுதாரருக்கு பரித்துரைக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டு மன்றம் முடித்து வைக்கப்பட்டது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 19.10.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு P. ஆனந்தன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு R. அன்புசெல்வன், செயற்பொறியாளர்/ இ&கா/ மணப்பாறை, திரு J. ஜான் பீட்டர், உதவி செயற்பொறியாளர்/ இ&கா / துவரங்குறிச்சி மற்றும் திரு P. வெள்ளைசாமி, உதவி மின்பொறியாளர்/ இ&கா / பாலக்குறிச்சி, திருச்சி மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## 5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் திருச்சி மாவட்டம் மணப்பாறை தாலுக்கா அயன்பொருவாய் கிராமம் சொக்கம்பட்டி வடக்கு களம் 4/323 என்ற முகவரியில் வசிக்கும் V. சிவபாக்கியம் அவர்கள் திருச்சி மாவட்டம் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு 20.04.2023 ம் தேதி புகார் மனு அனுப்பியுள்ளதாகவும், மின் நுகர்வோர் குறைதீர்ப்பு மன்றத்தில் புகார் மனு ஏற்றுக்கொள்ளப்பட்டு மேற்படி புகார் மனுவிற்கு C.G.R.F மனு எண் 77/2023 மனு நாள் 17-04-2023 என்று புகார் மனு எண் வழங்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 மேற்படி புகார் மனுதாரரின் பிரதிநிதியான திரு ஆனந்தன் அவர்களுக்கு புகார் மனு தொடர்பாக 26.05.2023 ம் தேதி 98942 09634 என்ற அலைபேசி எண்ணிலிருந்து புகார் மனு மீது 29.05.2023 அன்று மாலை நான்கு மணிக்கு நடைபெறும் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற விசாரணைக்கு அழைப்பு கடிதம் கிடைக்கப்பெற்றதா என்று

தன்னிடம் கேட்டதாகவும், அதற்கு அவர் புகார் மனுதாரருக்கோ அல்லது தனக்கோ அழைப்பு கடிதம் இது வரை கிடைக்கப்பெறவில்லை என்று பதில் அளித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேலும் 27.05.2023 மற்றும் 29.05.2023 ம் தேதிகளிலும் விசாரணை அழைப்புக் கடிதம் கிடைக்கப்பெறவில்லை என்பதை தனக்கு வந்த 98942 09634 என்ற அலைபேசி எண்ணிற்கு தகவல் தெரிவித்ததாகவும், 29.05.2023 ம் தேதியன்று மாலை 4.00 மணிக்கு நடைபெற்ற விசாரணை மன்றத்தில் புகார் மனு மீது நடைபெறும் விசாரணைக்கு மனுதாரருக்கோ அல்லது பிரதிநிதியான தனக்கோ விசாரணை அழைப்பு கடிதம் (29.05.2023 இன்று) மாலை வரை கிடைக்கப்பெறவில்லை என்றும் வேண்டுமானால் அயன்பொருவாய் தபால் நிலையத்தின் அலைபேசி எண்ணைத் தருவதாகவும் அதனை அவர்கள் விசாரணை செய்து கொள்ளும்படி சொல்லி விட்டு அழைப்பு கடிதம் தங்களுக்கு வழங்காமல் நடைபெறும் இந்த விசாரணையில் தான் கலந்துகொள்ள விரும்பவில்லை என்று விசாரணை மன்றத்தின் தலைவர் முன்னிலையில் தான் தெரிவித்து விட்டு விசாரணை மன்றத்திலிருந்து வெளியே வந்து விட்டதாகவும் மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

5.3 மேலும் புகார் மனு குறித்து விசாரணை மன்றத்தில் எதிர்மனுதாரர் பதில் அளித்ததில் விண்ணப்பதாரருக்கு கடந்த 04.10.2021 ல் (ஆனால் கடிதத்தில் நாள் 04.10.2020) மதிப்பீட்டுத்தொகை செலுத்துமாறு அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டதாகவும், அறிவிப்பு கடிதத்தை விண்ணப்பதாரர் வாங்க மறுத்தார் என்று விசாரணை மன்றத்தில் தெரிவித்துள்ளதாகவும், உதவி மின்பொறியாளர் அவர்கள் விண்ணப்பதாரர் முகவரிக்கு ஒப்புகை பதிவு அஞ்சலில் கடிதம் அனுப்பினாரா அல்லது சாதாரண தபாலில் அனுப்பப்பட்டதா, இல்லை அலுவலக பணியாளர் மூலம் நேரில் சென்று வழங்கப்பட்டதா என்பதையும் விண்ணப்பதாரர் எந்த வகையில் அறிவிப்பு கடிதத்தை வாங்க மறுத்தார் என்பதை விசாரணை மன்றத்தில் எதிர் மனுதாரர் தெளிவுப்படுத்தவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 பாலகுறிச்சி பிரிவு அலுவலரால் (25.11.2021)ல் க.எண்.உமி.பொ/பாகு கோ:CM.Cell /அஎண் 307/2021 நாள் 25.11.2021 மற்றும் 04.10.2020ம் தேதியிட்ட 2 அறிவிப்பு கடிதமும் விண்ணப்பதாரரிடம் உள்ளபோது அவர் அறிவிப்பு கடிதத்தை வாங்க மறுத்தார் என்பது உண்மையல்ல எனவும், மேலும் 04.10.2021ம் தேதி (ஆனால் கடிதத்தில்

04.10.2020) அறிவிப்பு கடிதம் விண்ணப்பதாரரிடம் வழங்கப்பட்டதென்றும், அதை விண்ணப்பதாரர் வாங்க மறுத்ததால் விண்ணப்பத்திலுள்ள அலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு தகவல் அளிக்கப்பட்டதின் பேரில் திரு ஆனந்தன் அவர்கள் 07.10.2021 ம் தேதி பாலக்குறிச்சி பிரிவு அலுவலகத்தில் அறிவிப்பு கடிதத்தை கையொப்பமிட்டு பெற்றுக்கொண்டதாக எதிர்மனுதாரர் விசாரணை மன்றத்தில் தெரிவித்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 விண்ணப்பத்திலுள்ள அலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு தகவல் அளிக்கப்பட்டது என்றால் 04.10.2021ம் தேதி முதல் 07.10.2021 ம் தேதி வரை எந்த தேதியில் விண்ணப்பத்திலுள்ள அலைபேசி எண்ணிற்கு தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கப்பட்டது என்ற விபரம் விசாரணை மன்றத்தில் தெரிவிக்கப்படவில்லை என்றும் 7ம் தேதி 2021–ம் ஆண்டு அறிவிப்பு கடிதத்தை தான் பெற்றுக்கொண்டது உண்மை எனவும், ஆனால் 10வது (அக்டோபர்) மாதம் என்பது உண்மையில்லை எனவும், எதிர்மனுதாரர் 04.10.2020 ம் நாளிட்ட கடிதத்தில் விண்ணப்பப் பதிவு எண் தவறுதலாக குறிப்பிடப்பட்டிருப்பது தட்டச்சுப்பிழையே என்று விசாரணை மன்றத்தில் தெரிவித்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 அப்படியானால் 04.10.2020 ம் தேதி என்பது சரிதானா? (விண்ணப்பப் பதிவு செய்த நாள் 26.08.2021) தவறுதலாக என்பது வேறு, தப்பு என்பது வேறு ஒரு கடிதத்தில் ஒரு முறை ஏற்படுவது தவறுதலாக நடப்பது. ஆனால் 04.10.2020 ம் தேதியில் வழங்கப்பட்ட 2 அறிவிப்பு கடிதத்திலும் விண்ணப்ப பதிவு எண் மட்டும் தவறாக வழங்கப்படவில்லை எனவும், மாறாக கடிதம் வழங்கப்பட்ட நாள் 04.10.2020 ஆண்டு கள ஆய்வு செய்து மதிப்பீடு தயார் செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது, என்ற வாசகம் உள்ளதாகவும், இது போலதான் இரண்டு அறிவிப்பு கடிதத்திலும் விண்ணப்ப பதிவு எண்ணை வேண்டும் என்றே ஒரு எண்ணை குறைத்து தப்பாக வழங்கியுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 மன்றத்தின் தீர்ப்பில் மனுதாரர் அவர்களுடைய விண்ணப்பம் பதிவு செய்த நாள், விண்ணப்ப பதிவு எண், விண்ணப்ப பதிவு கட்டணம் மற்றும் மதிப்பீட்டு தொகை விபரங்கள் அனைத்தும் மன்றத்தின் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால்

எதிர்மனுதாரர் மதிப்பீட்டுத்தொகை செலுத்த அறிவிப்புக் கடிதம் எந்த தேதியில் வழங்கினார் என்றும், அறிவிப்பு கடிதத்தில் உள்ள விண்ணப்ப பதிவு எண் என்ன தட்டச்சுப்பிழையினால் ஏற்பட்ட தவறு என்ன என்ற விபரங்கள் எதுவும் விசாரணை மன்றத்தின் தீர்ப்பாணையில் தெளிவுப்படுத்தப்படவில்லை என்றும், மேலும் மனுதாரர் தன்னுடைய புகார் மனுவில் விண்ணப்ப பதிவு 12.04.2022 ம் தேதி ரத்து செய்யப்பட்டதற்கு பின் பாலக்குறிச்சி உதவி மின் பொறியாளர் அவர்களுக்கு தனது விண்ணப்ப பதிவு எண்ணில் ஒரு எண் விடுபட்டு உள்ளதற்கு விளக்கம் கேட்டு 10.05.2022 ம் தேதி கடிதம் எழுதியதாகவும், அதற்கு 10 மாதம் கடந்த பின்பும் இன்னும் பதில் விளக்கம் தரவில்லை என்று தனது புகார் மனுவில் தெரிவித்திருந்ததாகவும், அதற்கு எதிர்மனுதாரர் விசாரணை மன்றத்தில் எந்த வகையில் பதில் தந்தார்கள் என்பதையும் அந்த பதிலின் அடிப்படையில் விசாரணை மன்றம் என்ன நடவடிக்கை எடுத்தது என்ற விபரங்கள் மன்றத்தின் தீர்ப்பாணையில் மனுதாரருக்கு தெளிவுப்படுத்தப்படவில்லை எனவும், எதிர்மனுதாரர் தவறு செய்துள்ளார் என்பதற்கு பல சாட்சி ஆவணங்கள் மன்றத்தின் தீர்ப்பிலேயே உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 எனவே மனுதாரருக்கு உரிய வகையில் நீதி வழங்கிடவும், மனுதாரரின் வீட்டுக்கு மின்இணைப்பு வழங்கிடவும் மற்றும் உறிய இழப்பீடு வேண்டியும் மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 திருச்சி மாவட்டம் மணப்பாறை தாலுக்கா அயன் பொருவாய் கிராமம் சொக்கம்பட்டி வடக்கு கல கதவு எண்.4/323 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. வெ. சிவபாக்கியம், திருச்சி மாவட்டம் மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்திற்கு 20.04.2023–ல் புகார் மனு அனுப்பியுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மனுதாரரின் புகார் மனு ஏற்றுக்கொள்ளப்பட்டு மனு எண்.77/2023/20.04.2023– பதியப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேலே மனுதாரரின் முகவரியில் குறிப்பிடப்பட்டுள்ள மணப்பாறை தாலுகா அயன் பொருவாய் கிராமம் என்பது தவறாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். திருச்சி மாவட்டம், மருங்காபுரி தாலுகா, அயன் பொருவாய் கிராமம், சொக்கம்பட்டி வடக்கு களம் என்பதே சரியானதாகும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மேற்படி புகார் மனுவின் மீது திருச்சி பெருநகர் மின்பகிர்மான வட்ட குறைதீர் மன்றத்தில் 29.05.2023–ல் விசாரணை மேற்கொள்ள மனுதாரருக்கு திருச்சி மின்பகிர்மான வட்ட அலுவலகத்தில் பணிபுரியும் தொழில்நுட்ப உதவியாளரின் 9894209634 என்ற அலைபேசி எண்ணிலிருந்து 26.05.2023–ல் அழைப்பு கடிதம் கிடைக்கப்பெற்றதா என அலைபேசி மூலம் கேட்கப்பட்டதாகவும், மேலும் திருச்சி மின் பகிர்மான வட்ட அலுவலகத்திலிருந்து 23.05.2023ல் மனுதாரருக்கு சாதாரன தபால் மூலம் கடிதம் அனுப்பப்பட்டதாகவும், மனுதாரர் பிரதிநிதியான திரு.ப. ஆனந்தனின் அலைபேசி எண்ணிற்கு 27.05.2023–லும் 29.05.2023–லும் விசாரணை நாள் குறித்து தெரிவிக்கப்பட்டதாகவும், இதனை மனுதாரரின் பிரதிநிதியான திரு.ப. ஆனந்தன் அவர்களும் தன்னுடைய மேல்முறையீட்டுக்கான விளக்க கடிதத்தில் ஒத்துக்கொண்டுள்ளார் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். முதன் முதலில் மனுதாரர் திருமதி. வெ.சிவபாக்கியம், வீட்டு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பிக்கும் போதே மனுதாரரின் பிரதிநிதியான திரு.ப.ஆனந்தன் அவர்களின் அலைபேசி எண்ணான 9865509142 குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 திருச்சி மின்பகிர்மான வட்ட மின் நுகர்வோர் குறைதீர் மன்ற அலுவலகம் மூலம் 29.05.2023–ல் நடைபெற்ற விசாரணைக்கு கடிதம் சாதாரண தபாலிலேயே அனுப்பப்பட்டுள்ளதாகவும், எனவே மனுதாரருக்கு விசாரணையில் கலந்துகொள்ள அனுப்பப்பட்ட கடிதம் கிடைக்கப்பெற்றதை உறுதி செய்ய இயலவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மனுதாரரின் பிரதிநிதியான திரு.ப.ஆனந்தன் அவர்களின் அலைபேசி எண்ணிற்கு பலமுறை 29.05.2023–ல் விசாரணை நடைபெறும் என்பது தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே அழைப்புக்கடிதம் கிடைக்கப்பெறவில்லை என தெரிவித்து விட்டு மனுதாரரின் பிரதிநிதியான திரு.ப.ஆனந்தன் விசாரணையில் கலந்து கொள்ளாமல் விசாரணையை புறக்கணித்து மின் நுகர்வோர் மன்றத்திலிருந்து வெளிநடப்பு செய்து விட்டார் எனவும், மனுதாரரான திருமதி.வெ.சிவபாக்கியம் அவர்கள் 29.05.2023–ல் திருச்சி மின் பகிர்மான வட்ட மின் குறைதீர்ப்பாளர் மன்றத்தில் கலந்து கொள்ளவில்லை என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்வதாக எதிர்மனுதாரர்

தெரிவித்துள்ளார். இதன்மூலம் தன்னுடைய தரப்பு வாதத்தினை மனுதாரரால் திருச்சி மின் பகிர்மான வட்ட குறைதீர் மன்றத்தில் முழுமையாக அளிக்கவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மனுதாரரான திருமதி.வெ.சிவபாக்கியம் அவர்களுக்கு கடந்த 04.10.2021–ல் மதிப்பீட்டுத் தொகை செலுத்துமாறு அறிவிப்புக் கடிதம் பாலக்குறிச்சி உதவி மின் பொறியாளர் அலுவலகத்தில் பணிபுரியும் கம்பியாளர் திரு.சி.தமிழ்ச்செல்வன் மூலமும், பிறகு திரு.ராதாகிருஷ்ணன் கேங்மேன் மூலமும் கடிதம் நேரடியாக சென்று வழங்கப்பட்டபோது, திருமதி.வெ.சிவபாக்கியம் கடிதத்தினை வாங்க மறுத்துவிட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மேற்படி கடிதத்தில் 04.10.2021–க்குப் பதில் 04.10.2020 என தவறாக கணினியில் தட்டச்சு செய்யும்போது பிழை ஏற்பட்டுள்ளது எனவும் மேலும் அதே கடிதத்தில் பார்வையில் குறிப்பிடப்பட்ட இடத்தில் விண்ணப்பம் பெறப்பட்ட தேதி 26.08.2021 என குறிட்டப்பட்டுள்ளது என்றும் விண்ணப்பம் பெறப்பட்ட பிறகே, அவ்விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை ஒரு அலுவலரால் எடுக்க இயலும் என்றும் எனவே 26.08.2021–ல் பெறப்பட்ட வீட்டு மின் இணைப்பு விண்ணப்பத்தின் மீது 27.08.2021–ம் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அவ்விண்ணப்பத்தின் மீது மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 09.09.2021–ல் உதவி மின் பொறியாளரால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். இதன்பிறகு கடந்த 04.10.2021–ல் உதவி மின்பொறியாளரால் மதிப்பீட்டுத்தொகை செலுத்த வேண்டி விண்ணப்பதாரருக்கு வழங்கப்பட்ட கடிதத்தினை திருமதி.வெ.சிவபாக்கியம். வாங்க மறுத்ததால் மனுதாரரின் பிரதிநிதியான திரு.ப.ஆனந்தன், உதவி மின்பொறியாளர்/இ.கா/பாலக்குறிச்சி. அலுவலகத்திற்கு நேரடியாகச் சென்று 07.10.2021–ல் கையொப்பமிட்டு பெற்றுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 வீட்டு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பிக்கும் ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இணையதளம் மூலம் கட்டாயமாக பதிவு செய்ய வேண்டும் என்ற நடைமுறை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் 01.03.2020 முதல் அமலாக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு பதிவு செய்யும் பொழுது வின்னப்பதாரரின்

விண்ணப்பத்தின் மீது மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் உடனடியாக விண்ணப்பதாரரின் அலைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி மூலம் தெரியப்படுத்தப்பட்டு வருகிறது என்றும், அவ்வாறே திருமதி.வெ.சிவபாக்கியம் அவர்கள் 26.08.2021-ல் விண்ணப்பம் பதிவு செய்யும்போது அவருடைய பிரதிநிதியான திரு.ப.ஆனந்தன் அவர்களின் எண்ணிற்கு குறுஞ்செய்தி அனுப்பப்பட்டு விண்ணப்ப பதிவு எண்ணும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 ஆனால் மனுதாரரின் பிரதிநிதியான திரு.ப.ஆனந்தன், விண்ணப்ப பதிவு எண்ணும் கடிதம் அனுப்பப்பட்ட தேதியிலும் குறிப்பிடப்பட்ட தட்டச்சு பிழையை காரணம் காட்டி மதிப்பீட்டுத் தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கவேண்டும் என தொடர்ந்து புகார்மனு அளித்த வண்ணம் உள்ளார் என்பதையும் மாநில குறைதீர்ப்பாளர் மன்றத்திற்கு பணிந்து தெரிவித்துக்கொள்வதாக அவர் தெரிவித்துள்ளார். மேலும் மனுதாரர் மதிப்பீட்டுத் தொகை செலுத்தத் தவறியதால் 12:04.2022-ல் விண்ணப்பம் தள்ளுபடி செய்யட்டட்டுள்ளதாகவும், அதன் பிறகு கடந்த 10.05.2022ல் மனுதாரரால் அனுப்பப்பட்ட புகார் மனுவிற்கு உதவி மின்பொறியாளர்/இ.கா/பாலக்குறிச்சி அவர்களால் கடந்த 23.05.2022-ல் பதில் தரப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 மனுதாரரின் பிரதிநிதியான திரு.ப.ஆனந்தன், திருச்சி மின் பகிர்மான வட்ட குறைதீர் மன்றத்தில் நடைபெற்ற விசாரணையில் கலந்து கொண்டு, உடனடியாக வெளிநடப்பு செய்துவிட்டு குறைதீர் மன்ற விசாரணையில் தனக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பினை முறையாக பயன்படுத்தாமல் எதிர்மனுதாரர் தெரிவித்த விவரங்களையும் முழுமையாக தெரிந்து கொள்ளாமல் சென்று விட்டதாகவும், மனுதாரரின் 26.08.2021 வீட்டு மின் இணைப்பு விண்ணப்பத்தின் மீது சம்பந்தப்பட்ட பாலக்குறிச்சி உதவி மின் பொறியாளரால் 27.08.2021-ல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மதிப்பீடு உடனடியாக தயாரிக்கப்பட்டு, 09.09.2021-ல் அனுமதி அளிக்கப்பட்டு மதிப்பீட்டுத் தொகை செலுத்த வேண்டி 04.10.2021-ல் விண்ணப்பதாரருக்கு முறையாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.10 அதனை கடந்த 07.10.2021-ல் விண்ணப்பதாரரின் பிரதிநிதியான திரு. ப. ஆனந்தன் அவர்கள் பாலக்குறிச்சி மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக

அலுவலகத்திற்கு நேரடியாக சென்று பெற்றுக் கொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ.16,208/-ஐ செலுத்தாத காரணத்தால் அவ்விண்ணப்பமானது கடந்த 12.04.2022 அன்று தள்ளுடி செய்யப்பட்டுள்ளதாகவும், விண்ணப்பதாரர் திருமதி.வெ.சிவபாக்கியம் வீட்டு மின் இணைப்பு வேண்டி மீண்டும் புதிதாக விண்ணப்பிக்கும் பட்சத்தில் அவருக்கு உடனடியாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக விதிகளின்படி மின் இணைப்பு வழங்கப்படும் எனவும், மனுதாரர் வீட்டு மின் இணைப்புப் பெற ஏற்கனவே செலுத்திய ரூ.2,900/- (ரூபாய் இரண்டாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) விண்ணப்பதாரருக்கு வழங்கப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் திருமதி V. சிவபாக்கியம், கதவு எண் 4/323, வடக்கு களம், சொக்கம்பட்டி, அயன்பொருவாய் கிராமம், மருங்காபுரி தாலுக்கா, திருச்சி மாவட்டம் என்ற முகவரியில் வசிப்பதாகவும் தனது வீட்டிற்கு மின் இணைப்பு கோரி 26.08.2021-இல் இணையதளம் மூலம் விண்ணப்பம் பதிவு செய்து விண்ணப்பப் பதிவு எண் 200062540821341, விண்ணப்பக் கட்டணம் ரூ.3,018/- செலுத்திய நிலையில் மின் இணைப்பு பெற மதிப்பீட்டுத் தொகை ரூ.16,208/- செலுத்துமாறு 19.09.2021 அன்று அலைபேசி எண்ணுக்கு குறுஞ்செய்தி பெறப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 அச்சமயம் கொரோனா முதல் அலை காரணமாக வேலையில்லாததால் மதிப்பீட்டுத்தொகை செலுத்த கால தாமதமான நிலையில் 04.10.2021 (தவறுதலாக 04.10.2020) நாளிட்ட கடிதத்தில் 15 தினங்களுக்குள் மதிப்பீட்டுத்தொகை ரூ. 16,208/-யை செலுத்த வேண்டும் எனவும் செலுத்த தவறும் பட்சத்தில் விண்ணப்பப் பதிவு ரத்து செய்யப்படும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும், மேலும், மதிப்பீட்டுத் தொகை செலுத்துமாறு வழங்கிய அறிவிப்பு கடிதத்தில் விண்ணப்பப்பதிவு எண் 2540821341-

க்கு பதிலாக தவறுதலாக 254082134 என குறிப்பிடப்பட்டிருந்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 அதனை தொடர்ந்து மதிப்பீட்டுத் தொகை செலுத்த பாலக்குறிச்சியில் உள்ள இ-சேவை மையத்திற்கு சென்ற போது விண்ணப்பப்பதிவு எண்ணை சரி பார்க்கவும் என கூறியதாகவும், கொரோனா காரணமாக பாலக்குறிச்சிக்கு சென்று வர இயலாத நிலையில் மதிப்பீட்டுத்தொகையினை செலுத்த கால தாமதம் ஏற்பட்ட நிலையில் 12.04.2022 அன்று தன்னுடைய விண்ணப்பம் ரத்து செய்யப்படுவதாக அலைபேசிக்கு குறுஞ்செய்தி வரப்பெற்றதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.5 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் 26.08.2021-ல் மேல்முறையீட்டாளரிடமிருந்து பெறப்பட்ட வீட்டு மின் இணைப்பு விண்ணபத்தின் மீது 27.08.2021-இல் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அவ்விண்ணபத்தின் மீது மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 09.09.2021-இல் உதவி மின் பொறியாளரால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இதன்பிறகு கடந்த 04.10.2021-இல் உதவி மின்பொறியாளரால் மதிப்பீட்டுத் தொகை செலுத்த வேண்டி விண்ணபதாரருக்கு வழங்கப்பட்ட கடிதத்தினை திருமதி.வெ.சிவபாக்கியம் வாங்க மறுத்ததால் மேல்முறையீட்டாளரின் பிரதிநிதியான திரு.ப.ஆனந்தன், உதவி மின்பொறியாளர்/இ.கா/ பாலக்குறிச்சி அலுவலகத்திற்கு நேரடியாகச் சென்று 07.10.2021-இல் கையொப்பமிட்டு பெற்றுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 மேல்முறையீட்டாளரின் வீட்டு மின் இணைப்பு விண்ணபத்தின் மீது சம்பந்தப்பட்ட பாலக்குறிச்சி உதவி மின் பொறியாளரால் 27.08.2021-இல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மதிப்பீடு உடனடியாக தயாரிக்கப்பட்டு, 09.09.2021-இல் அனுமதி அளிக்கப்பட்டு மதிப்பீட்டுத் தொகை செலுத்த வேண்டி 04.10.2021-இல் விண்ணபதாரருக்கு முறையாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், மதிப்பீட்டுத் தொகையான ரூ.16,208/-ஐ செலுத்தாத காரணத்தால் அவ்விண்ணப்பமானது கடந்த 12.04.2022 அன்று தள்ளுடி செய்யப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 மதிப்பீட்டுத் தொகை செலுத்த கோரப்பட்ட கடிதத்தில் விண்ணப்ப பதிவு எண் தவறுதலாக குறிப்பிடப்பட்டதாலேயே மதிப்பீட்டுத் தொகை செலுத்த காலதாமதம்

ஏற்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். இருப்பினும் வீட்டு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பிக்கும் ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இணையதளம் மூலம் கட்டாயமாக பதிவு செய்ய வேண்டும் என்ற நடைமுறை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் 01.03.2020 முதல் அமலாக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு பதிவு செய்யும் பொழுது வின்ணப்பதாரரின் வின்ணப்பத்தின் மீது மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் உடனடியாக விண்ணப்பதாரரின் அலைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி மூலம் தெரியப்படுத்தப்பட்டு வருகிறது என்றும், அவ்வாறே திருமதி.வெ.சிவபாக்கியம் அவர்கள் 26.08.2021–இல் விண்ணப்பம் பதிவு செய்யும்போது அவருடைய பிரதிநிதியான திரு.ப.ஆனந்தன் அவர்களின் எண்ணிற்கு குறுஞ்செய்தி அனுப்பப்பட்டு விண்ணப்ப பதிவு எண்ணும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். எனவே, அறிவிப்பு கடிதத்தில் விண்ணப்ப பதிவு எண் தவறுதலாக குறிப்பிட்டதாலேயே மதிப்பீட்டு தொகையை செலுத்த கால தாமதம் ஏற்பட்டதாக கூறும் மேல்முறையீட்டாளரின் வாதம் ஏற்புடையதாக இல்லை என தெரிவித்துள்ளார்.

7.8 எனவே, மேல்முறையீட்டாளர் திருமதி.வெ.சிவபாக்கியம் வீட்டு மின் இணைப்பு வேண்டி மீண்டும் புதிதாக விண்ணப்பிக்கும் பட்சத்தில் அவருக்கு உடனடியாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக விதிகளின்படி மின் இணைப்பு வழங்கப்படும் எனவும், மனுதாரர் வீட்டு மின் இணைப்புப் பெற ஏற்கனவே செலுத்திய ரூ.2,900/– (ரூபாய் இரண்டாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) விண்ணப்பதாருக்கு வழங்கப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.9 மேற்கூறிய வாதி பிரதி வாதங்களை ஆராயும் பொழுது மேல்முறையிட்டாளர் விண்ணப்பம் பதிவு செய்யும் போது அதன் பதிவு எண்.2540821341 என்பது தெரிய வருகிறது. மேற்கூறிய விண்ணப்ப எண் மேல்முறையிட்டாளரால் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டவுடன் 26–08–2021 குறுஞ்செய்தி மூலம் பதிவு செய்யப்பட்ட அலைப்பேசிக்கு சென்றதும் தெரிய வருகிறது. அதன் பின்பு கள ஆய்வு செய்து minor extension typeல் வருவதால் 04–10–2021 என்ற கடிதத்தில் 04–10–2020 என்று தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்ட கடிதத்தில் பதிவு எண்.254082134 என்று தவறுதலாக அனுப்பபட்டதும். அக்கடிதத்தை மேல்முறையீட்டாளரின் பிரதிநிதியான

திரு.ப.ஆனந்தன் அவர்கள் 07-10-2021 அன்று நேரில் பெற்று கொண்டதும் தெரிய வருகிறது.

7.10 மேலும் மேல்முறையீட்டாளர் minor extension ஆன திட்ட மதிப்பீட்டை குறித்த காலத்தில் கட்ட இயலாது என்று முறையிட்டதும் 13-10-2021 கடிதம் மூலம் தெரிவித்த நிலையில் எதிர்மனுதாரர் 25-11-2021இல் மீண்டும் மதிப்பீட்டு தொகை கட்ட வலியுறுத்தியதும் தெரிய வருகிறது. ஆனால் மேல்முறையீட்டாளர் minor extension மூலம் குறித்த 15 நாட்களுக்குள் கட்டவில்லை என்பதும் எதிர்மனுதாரர் நேரில் சென்று வலியுறுத்தியும் மேல்முறையீட்டாளர் 04-10-2020 என்ற தவறான எழுத்து பிழை கடிதம் 07-10-2021ல் பெறப்பட்டதினால் தன்னால் திட்ட மதிப்பீட்டு பணம் கட்ட அரசு உதவி பெற இயலவில்லை என தெரிவித்துள்ளார். தட்டச்சு பிழையால் தன்னால் திட்ட மதிப்பீட்டு பணம் கட்ட இயலவில்லை என்ற மேல்முறையீட்டாளரின் பொதுவான வாதத்தின் மூலம் குறிப்பிட்ட 15 நாட்களுக்குள் பணம் செலுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டதா என்று அறிய இயலவில்லை. மேலும், எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளர் விண்ணப்பத்தை 12-04-2022 அன்றுதான் அதாவது கிட்டதட்ட ஆறு மாதம் கழித்து ரத்து செய்துள்ளதை கவனத்தில் கொண்டால் மேல்முறையீட்டாளருக்கு போதுமான காலஅவகாசம் உள்ளதை அறியமுடிகிறது.

7.11 மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரையின் போது மேல்முறையீட்டாளர், எதிர்மனுதாரர் கோரும் திட்ட மதிப்பீட்டு கட்டணத்தை செலுத்துவதற்கு தனக்கு பொருளாதார வசதியில்லையென்பதால், தன்னுடைய வீட்டிற்கு வரும் service wire மற்றும் மின்னளவி பொருத்துவதற்கான கட்டமைப்பை விரிவாக்கம் இல்லாத அளவிற்கு மாற்று வழிதடத்தில் அமைத்து தருவதாக தெரிவித்தார். எதிர்மனுதாரரும் அவ்வாறு மாற்று வழித்தடம் அமைத்து புதியதாக விண்ணப்பிக்கும் நேர்வில் மேல்முறையீட்டாளரின் வளாகத்தை ஆய்வு செய்து (minor extension) தேவைப்படாத நேர்வில் திட்ட மதிப்பீடின்றி mere service-ல் மின்னிணைப்பு வழங்கப்படும் என உறுதியளித்தார்.

7.12 எனவே புதிய மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் விண்ணப்பிக்குமாறும், அவ்வாறு விண்ணப்பிக்கும் பட்சத்தில் அதன் மீது நடைமுறையில் உள்ள மின்வாரிய விதிமுறையின் படி உரிய நடவடிக்கை எடுத்து புதிய

மின் இணைப்பு வழங்குமாறு எதிர்மனுதாரருக்கு உத்திரவிடப்படுகிறது. மேலும் எதிர்மனுதாரர் இனி வரும் காலங்களில் தட்டச்சு, எழுத்து பிழை போன்றவற்றை தவிர்த்து மிக கவனமாக செயல்பட அறிவுறுத்தப்படுகிறது.

7.13 மேல்முறையீட்டாளரின் மனுவில் காலதாமதத்திற்கு உரிய இழப்பீடு தொகை வழங்குமாறும் கோரியுள்ளார். இது சம்பந்தமாக நான் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின் குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 7(11)ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"(7) குறைமுறையீடு, சட்டத்தின் 57 (1) வது பிரிவின்படி, ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள உரிமதாரர் கடைப்பிடிக்க வேண்டிய செயல்திறன் அளவுகளில் நுகர்வோர் சேவைத்திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என கண்டறிந்தால், நுகர்வோர் இழப்பீட்டுத் தொகை பெற தகுதியுள்ளவர் என முடிவு செய்யலாம். மேலும், நுகர்வோர் சம்மதித்தால், ஆணையத்தால் இது சம்பந்தமாக வகுக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிட்டுள்ள இழப்பீட்டுத் தொகையைப் பெற ஒத்துக் கொள்ளலாம் என அறிவிக்கலாம்."*

7.14 மேற்கண்ட விதியை கூர்ந்து பார்க்கும் பொழுது நாம் அறிவது ஒழுங்குமுறை ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள செயல்திறன் அளவுகளில் நுகர்வோரின் சேவைத்திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என கண்டறிந்தால் நுகர்வோர் இழப்பீட்டு தொகையை பெறுவதற்கு தகுதியானவர் என்று முடிவு செய்யலாம் என்று தெரிகிறது. மேலும், ஆணையம், நிர்ணயித்துள்ள செயல்திறன் அளவுகளை உரிமதாரர் கடைபிடிக்காமல் இருந்தால் வழங்கப்படும் இழப்பீட்டு தொகையை தவிர வேறு நஷ்டஈடு வழங்குவதற்கு மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளில் வழி இல்லை என்று தெரிகிறது.

7.15 இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர் மதிப்பீட்டுத் தொகை செலுத்தாத காரணத்தினால்தான் புதிய வீட்டு மின் இணைப்பிற்கான விண்ணப்பம் எதிர்மனுதாரரால் ரத்து செய்யப்பட்டுள்ளது. எனவே, இதில் சேவை குறைபாடு இல்லை என்பதால் மேல்முறையீட்டாளரின் இழப்பீடு கோரிக்கை நிராகரிக்கப்படுகின்றது.

**8.0 <u>முடிவுரை</u>:**

8.1 மேல்முறையீட்டாளர் மின் பலகை பொருத்துவதற்கான மாற்று இடத்தை தேர்வு செய்து புதிய மின்இணைப்பிற்கான விண்ணப்பத்தினை அளிக்கும் நேர்வில் புதிய மின் இணைப்பு வழங்குமாறு உத்திரவிடப்படுகிறது. மேலும், எதிர்மனுதாரர் ஏற்கனவே ரத்து செய்யப்பட்ட மேல்முறையீட்டாளரின் விண்ணப்பதில் நிலுவையில் உள்ள தொகையை திரும்பி வழங்கிய பின்பு அதன் மீது நடவடிக்கை குறித்த அறிக்கை இவ்வலுவலத்திற்கு 15 தினங்களுக்குள் சமர்பிக்குமாறு உத்திரவிடப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 64/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திருமதி V. சிவபாக்கியம், <u>BY RPAD</u>
க/பெ. வெள்ளைசாமி,
க,எண். 4/323, வடக்கு களம்,
சொக்கம்பட்டி, அயன்பொருவாய்,
திருச்சி மாவட்டம் – 631 308.

2. செயற்பொறியாளர்/ இ&கா/ மணப்பாறை,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
729, 4, மணப்பாறைப்பட்டி ரோடு, மணப்பாறை அஞ்சல்,
மணப்பாறை, திருச்சி – 621 306.

3. உதவி செயற்பொறியாளர்/ இ&கா / துவரங்குறிச்சி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துவரங்குறிச்சி SS, மணப்பாறை ரோடு,
துலுக்கம்பட்டி, துவரங்குறிச்சி, திருச்சி – 621 314.

4. உதவி மின்பொறியாளர்/ இ&கா / பாலக்குறிச்சி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
7/70, வடக்கு தெரு, பாலக்குறிச்சி,
மணப்பாறை, திருச்சி – 621 308.

5. **மேற்பார்வை பொறியாளர்,** – By email
**திருச்சி** மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மன்னார்புரம் மெயின் ரோடு, திருச்சி – **620 020.**

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
**144**, அண்ணாசாலை, சென்னை – **600 002.**

7. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
**4**வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – **600 032.**

8. உதவி இயக்குநர் (கணினி) – **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
**4**வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – **600 032.**

A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 64 / 2023**

திருமதி V. சிவபாக்கியம்,
க/பெ. வெள்ளைசாமி,
க,எண். 4/323, வடக்கு களம்,
சொக்கம்பட்டி, அயன்பொருவாய்,
திருச்சி மாவட்டம் – 631 308. ………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு P.ஆனந்தன்)

எதிர்

1) செயற்பொறியாளர்/ இ&கா/ மணப்பாறை,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
729, 4, மணப்பாறைப்பட்டி ரோடு, மணப்பாறை அஞ்சல்,
மணப்பாறை, திருச்சி – 621 306.

2) உதவி செயற்பொறியாளர்/ இ&கா / துவரங்குறிச்சி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துவரங்குறிச்சி SS, மணப்பாறை ரோடு,
துலுக்கம்பட்டி, துவரங்குறிச்சி, திருச்சி – 621 314.

3) உதவி மின்பொறியாளர்/ இ&கா / பாலக்குறிச்சி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
7/70, வடக்கு தெரு, பாலக்குறிச்சி,
மணப்பாறை, திருச்சி – 621 308.

. . . எதிர்மனுதாரர்கள்

(திரு R. அன்புசெல்வன், செயற்பொறியாளர்/ இ&கா/ மணப்பாறை
திரு J. ஜான் பீட்டர், உதவி செயற்பொறியாளர்/ இ&கா / துவரங்குறிச்சி
திரு P. வெள்ளைசாமி, உதவி மின்பொறியாளர்/ இ&கா / பாலக்குறிச்சி)

**மனு பெறப்பட்ட நாள்: 23-08-2023**

**கேட்புரை நாள்: 19-10-2023**

**ஆணை நாள்: 06-11-2023**

23.08.2023 அன்று பெறப்பட்ட திருமதி V. சிவபாக்கியம், க/பெ. வெள்ளைசாமி, க,எண். 4/323, வடக்கு களம், சொக்கம்பட்டி, அயன்பொருவாய், திருச்சி மாவட்டம் – 631 308 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 64/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 19.10.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

<u>ஆணை</u>

1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>

தனது வீட்டிற்கு புதிய மின் இணைப்பு வழங்க கோரியும் மற்றும் உரிய இழப்பீடு வேண்டியும் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 <u>வழக்கின் சுருக்கம்:</u>

2.1 தனது வீட்டிற்கு புதிய மின் இணைப்பு வேண்டி இணையதளம் மூலம் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 புதிய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்த விண்ணப்பத்தின் அடிப்படையில் உதவி பொறியாளர்/இ&கா/பாலகுறிச்சி மதிப்பீட்டு தொகை செலுத்துமாறு மேல்முறையீட்டாளருக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டதாகவும், மேல்முறையீட்டாளர் மதிப்பீட்டுத் தொகை செலுத்தாத காரணத்தால் அவரது விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 புதிய மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் திருச்சி மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 20.04.2023 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திருச்சி மின் பகிர்மான வட்டம் 29.05.2023 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில்

அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>

3.1 திருச்சி மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 29.05.2023 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"மன்றத்தின் தீர்வு:*
>
> *மன்ற விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது மனுதாரர் திருமதி V சிவபாக்கியம் சார்பாக ஆஜராகிய திரு ஆனந்தன் அவர்கள் மன்றத்தை மதிக்காமல் வெளிநடப்பு செய்தது மிகவும் கண்டிக்கத்தக்கது. இருதரப்பு சாட்சிகளையும் ஆவணங்களையும் பார்வையிட்ட மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் திருச்சி மாவட்டம், மணப்பாறை தாலுக்கா அயன்பொருவாய் சொக்கம்பட்டி வடக்கு களம். கதவு எண் 4/33 என்ற முகவரியில் உள்ள வீட்டிற்கு மின் இணைப்பு கோரி மனுதாரர் திருமதி V.சிவபாக்கியம் அவர்கள் 26.08.2021–ல் இணையதளம் மூலம் விண்ணப்பம் பதிவு செய்து (விண்ணப்பப் பதிவு எண் 200062540821341) விண்ணப்பக் கட்டணம் ரூ.3,018/– செலுத்திய நிலையில் மின் இணைப்பு பெற மதிப்பீட்டுத்தொகை ரூ.16,208/–யை செலுத்துமாறு அறிவிப்பு கடிதம் மூலமாகவும் மனுதாரருடைய அலைபேசி எண்ணுக்கு சரியான விண்ணப்பப் பதிவு எண்ணுடன் குறுஞ்செய்தி மூலமாகவும் தகவல் அனுப்பிய பிறகும் மனுதாரர் மதிப்பீட்டுத் தொகையினை செலுத்த தவறிவிட்டார்.*
>
> *இந்நிலையில், அறிவிப்புக் கடிதத்தில் தட்டச்சு பிழையினால் தவறாக குறிப்பிடப்பட்டிருந்த விண்ணப்பப் பதிவு எண்ணாலே மனுதாரரால் மதிப்பீட்டுத் தொகையினை செலுத்த இயலவில்லை என திருஆனந்தன் அவர்கள் கூறுவதை ஏற்க முடியாது. வாரிய விதிகளின் படி, மதிப்பீட்டுத் தொகையினை மனுதாரர் செலுத்த தவறியதால் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டுவிட்டதாக எதிர்மனுதாரர் கூறுவது ஏற்புடையதே. மேலும், விசாரணையில் மனுதாரர் சார்பாக ஆஜராகிய திரு.ஆனந்தன் அவர்கள் மனுதாரர் எவ்வித மதிப்பீட்டுத்தொகையும் செலுத்த மாட்டார் எனவும் வாரிய செலவில் மனுதாரருக்கு மின் இணைப்பு வழங்க வேண்டும் எனவும் கூறுவதை ஏற்க இயலாது.*
>
> *எனவே, மனுதாரர் திருமதி V சிவபாக்கியம் அவர்கள் தன்னுடைய வீட்டிற்கு மின் இணைப்பு கோரும் பட்சத்தில் புதிதாக இணைய தளத்தில் விண்ணப்பம் அளித்து விண்ணப்பக் கட்டணம் மற்றும் அதற்கான தற்போதைய மதிப்பீட்டுத் தொகையினை மனுதாரர் செலுத்தும்பட்சத்தில் அவருடைய வீட்டிற்கு மின் இணைப்பு வழங்கலாம் என எதிர்மனுதாரருக்கு பரித்துரைக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டு மன்றம் முடித்து வைக்கப்பட்டது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 19.10.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு P. ஆனந்தன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு R. அன்புசெல்வன், செயற்பொறியாளர்/ இ&கா/ மணப்பாறை, திரு J. ஜான் பீட்டர், உதவி செயற்பொறியாளர்/ இ&கா / துவரங்குறிச்சி மற்றும் திரு P. வெள்ளைசாமி, உதவி மின்பொறியாளர்/ இ&கா / பாலக்குறிச்சி, திருச்சி மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் திருச்சி மாவட்டம் மணப்பாறை தாலுக்கா அயன்பொருவாய் கிராமம் சொக்கம்பட்டி வடக்கு களம் 4/323 என்ற முகவரியில் வசிக்கும் V. சிவபாக்கியம் அவர்கள் திருச்சி மாவட்டம் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு 20.04.2023 ம் தேதி புகார் மனு அனுப்பியுள்ளதாகவும், மின் நுகர்வோர் குறைதீர்ப்பு மன்றத்தில் புகார் மனு ஏற்றுக்கொள்ளப்பட்டு மேற்படி புகார் மனுவிற்கு C.G.R.F மனு எண் 77/2023 மனு நாள் 17-04-2023 என்று புகார் மனு எண் வழங்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 மேற்படி புகார் மனுதாரரின் பிரதிநிதியான திரு ஆனந்தன் அவர்களுக்கு புகார் மனு தொடர்பாக 26.05.2023 ம் தேதி 98942 09634 என்ற அலைபேசி எண்ணிலிருந்து புகார் மனு மீது 29.05.2023 அன்று மாலை நான்கு மணிக்கு நடைபெறும் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற விசாரணைக்கு அழைப்பு கடிதம் கிடைக்கப்பெற்றதா என்று

தன்னிடம் கேட்டதாகவும், அதற்கு அவர் புகார் மனுதாரருக்கோ அல்லது தனக்கோ அழைப்பு கடிதம் இது வரை கிடைக்கப்பெறவில்லை என்று பதில் அளித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேலும் 27.05.2023 மற்றும் 29.05.2023 ம் தேதிகளிலும் விசாரணை அழைப்புக் கடிதம் கிடைக்கப்பெறவில்லை என்பதை தனக்கு வந்த 98942 09634 என்ற அலைபேசி எண்ணிற்கு தகவல் தெரிவித்ததாகவும், 29.05.2023 ம் தேதியன்று மாலை 4.00 மணிக்கு நடைபெற்ற விசாரணை மன்றத்தில் புகார் மனு மீது நடைபெறும் விசாரணைக்கு மனுதாரருக்கோ அல்லது பிரதிநிதியான தனக்கோ விசாரணை அழைப்பு கடிதம் (29.05.2023 இன்று) மாலை வரை கிடைக்கப்பெறவில்லை என்றும் வேண்டுமானால் அயன்பொருவாய் தபால் நிலையத்தின் அலைபேசி எண்ணைத் தருவதாகவும் அதனை அவர்கள் விசாரணை செய்து கொள்ளும்படி சொல்லி விட்டு அழைப்பு கடிதம் தங்களுக்கு வழங்காமல் நடைபெறும் இந்த விசாரணையில் தான் கலந்துகொள்ள விரும்பவில்லை என்று விசாரணை மன்றத்தின் தலைவர் முன்னிலையில் தான் தெரிவித்து விட்டு விசாரணை மன்றத்திலிருந்து வெளியே வந்து விட்டதாகவும் மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

5.3 மேலும் புகார் மனு குறித்து விசாரணை மன்றத்தில் எதிர்மனுதாரர் பதில் அளித்ததில் விண்ணப்பதாரருக்கு கடந்த 04.10.2021 ல் (ஆனால் கடிதத்தில் நாள் 04.10.2020) மதிப்பீட்டுத்தொகை செலுத்துமாறு அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டதாகவும், அறிவிப்பு கடிதத்தை விண்ணப்பதாரர் வாங்க மறுத்தார் என்று விசாரணை மன்றத்தில் தெரிவித்துள்ளதாகவும், உதவி மின்பொறியாளர் அவர்கள் விண்ணப்பதாரர் முகவரிக்கு ஒப்புகை பதிவு அஞ்சலில் கடிதம் அனுப்பினாரா அல்லது சாதாரண தபாலில் அனுப்பப்பட்டதா, இல்லை அலுவலக பணியாளர் மூலம் நேரில் சென்று வழங்கப்பட்டதா என்பதையும் விண்ணப்பதாரர் எந்த வகையில் அறிவிப்பு கடிதத்தை வாங்க மறுத்தார் என்பதை விசாரணை மன்றத்தில் எதிர் மனுதாரர் தெளிவுப்படுத்தவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 பாலகுறிச்சி பிரிவு அலுவலரால் (25.11.2021)ல் க.எண்.உமி.பொ/பாகு கோ:CM.Cell /அஎண் 307/2021 நாள் 25.11.2021 மற்றும் 04.10.2020ம் தேதியிட்ட 2 அறிவிப்பு கடிதமும் விண்ணப்பதாரரிடம் உள்ளபோது அவர் அறிவிப்பு கடிதத்தை வாங்க மறுத்தார் என்பது உண்மையல்ல எனவும், மேலும் 04.10.2021ம் தேதி (ஆனால் கடிதத்தில்

04.10.2020) அறிவிப்பு கடிதம் விண்ணப்பதாரரிடம் வழங்கப்பட்டதென்றும், அதை விண்ணப்பதாரர் வாங்க மறுத்ததால் விண்ணப்பத்திலுள்ள அலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு தகவல் அளிக்கப்பட்டதின் பேரில் திரு ஆனந்தன் அவர்கள் 07.10.2021 ம் தேதி பாலக்குறிச்சி பிரிவு அலுவலகத்தில் அறிவிப்பு கடிதத்தை கையொப்பமிட்டு பெற்றுக்கொண்டதாக எதிர்மனுதாரர் விசாரணை மன்றத்தில் தெரிவித்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 விண்ணப்பத்திலுள்ள அலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு தகவல் அளிக்கப்பட்டது என்றால் 04.10.2021ம் தேதி முதல் 07.10.2021 ம் தேதி வரை எந்த தேதியில் விண்ணப்பத்திலுள்ள அலைபேசி எண்ணிற்கு தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கப்பட்டது என்ற விபரம் விசாரணை மன்றத்தில் தெரிவிக்கப்படவில்லை என்றும் 7ம் தேதி 2021-ம் ஆண்டு அறிவிப்பு கடிதத்தை தான் பெற்றுக்கொண்டது உண்மை எனவும், ஆனால் 10வது (அக்டோபர்) மாதம் என்பது உண்மையில்லை எனவும், எதிர்மனுதாரர் 04.10.2020 ம் நாளிட்ட கடிதத்தில் விண்ணப்பப் பதிவு எண் தவறுதலாக குறிப்பிடப்பட்டிருப்பது தட்டச்சுப்பிழையே என்று விசாரணை மன்றத்தில் தெரிவித்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 அப்படியானால் 04.10.2020 ம் தேதி என்பது சரிதானா? (விண்ணப்பப் பதிவு செய்த நாள் 26.08.2021) தவறுதலாக என்பது வேறு, தப்பு என்பது வேறு ஒரு கடிதத்தில் ஒரு முறை ஏற்படுவது தவறுதலாக நடப்பது. ஆனால் 04.10.2020 ம் தேதியில் வழங்கப்பட்ட 2 அறிவிப்பு கடிதத்திலும் விண்ணப்ப பதிவு எண் மட்டும் தவறாக வழங்கப்படவில்லை எனவும், மாறாக கடிதம் வழங்கப்பட்ட நாள் 04.10.2020 ஆண்டு கள ஆய்வு செய்து மதிப்பீடு தயார் செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது, என்ற வாசகம் உள்ளதாகவும், இது போலதான் இரண்டு அறிவிப்பு கடிதத்திலும் விண்ணப்ப பதிவு எண்ணை வேண்டும் என்றே ஒரு எண்ணை குறைத்து தப்பாக வழங்கியுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 மன்றத்தின் தீர்ப்பில் மனுதாரர் அவர்களுடைய விண்ணப்பம் பதிவு செய்த நாள், விண்ணப்ப பதிவு எண், விண்ணப்ப பதிவு கட்டணம் மற்றும் மதிப்பீட்டு தொகை விபரங்கள் அனைத்தும் மன்றத்தின் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால்

எதிர்மனுதாரர் மதிப்பீட்டுத்தொகை செலுத்த அறிவிப்புக் கடிதம் எந்த தேதியில் வழங்கினார் என்றும், அறிவிப்பு கடிதத்தில் உள்ள விண்ணப்ப பதிவு எண் என்ன தட்டச்சுப்பிழையினால் ஏற்பட்ட தவறு என்ன என்ற விபரங்கள் எதுவும் விசாரணை மன்றத்தின் தீர்ப்பாணையில் தெளிவுப்படுத்தப்படவில்லை என்றும், மேலும் மனுதாரர் தன்னுடைய புகார் மனுவில் விண்ணப்ப பதிவு 12.04.2022 ம் தேதி ரத்து செய்யப்பட்டதற்கு பின் பாலக்குறிச்சி உதவி மின் பொறியாளர் அவர்களுக்கு தனது விண்ணப்ப பதிவு எண்ணில் ஒரு எண் விடுபட்டு உள்ளதற்கு விளக்கம் கேட்டு 10.05.2022 ம் தேதி கடிதம் எழுதியதாகவும், அதற்கு 10 மாதம் கடந்த பின்பும் இன்னும் பதில் விளக்கம் தரவில்லை என்று தனது புகார் மனுவில் தெரிவித்திருந்ததாகவும், அதற்கு எதிர்மனுதாரர் விசாரணை மன்றத்தில் எந்த வகையில் பதில் தந்தார்கள் என்பதையும் அந்த பதிலின் அடிப்படையில் விசாரணை மன்றம் என்ன நடவடிக்கை எடுத்தது என்ற விபரங்கள் மன்றத்தின் தீர்ப்பாணையில் மனுதாரருக்கு தெளிவுப்படுத்தப்படவில்லை எனவும், எதிர்மனுதாரர் தவறு செய்துள்ளார் என்பதற்கு பல சாட்சி ஆவணங்கள் மன்றத்தின் தீர்ப்பிலேயே உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 எனவே மனுதாரருக்கு உரிய வகையில் நீதி வழங்கிடவும், மனுதாரரின் வீட்டுக்கு மின்இணைப்பு வழங்கிடவும் மற்றும் உறிய இழப்பீடு வேண்டியும் மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 திருச்சி மாவட்டம் மணப்பாறை தாலுக்கா அயன் பொருவாய் கிராமம் சொக்கம்பட்டி வடக்கு கல கதவு எண்.4/323 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. வெ. சிவபாக்கியம், திருச்சி மாவட்டம் மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்திற்கு 20.04.2023–ல் புகார் மனு அனுப்பியுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மனுதாரரின் புகார் மனு ஏற்றுக்கொள்ளப்பட்டு மனு எண்.77/2023/20.04.2023– பதியப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேலே மனுதாரரின் முகவரியில் குறிப்பிடப்பட்டுள்ள மணப்பாறை தாலுகா அயன் பொருவாய் கிராமம் என்பது தவறாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். திருச்சி மாவட்டம், மருங்காபுரி தாலுகா, அயன் பொருவாய் கிராமம், சொக்கம்பட்டி வடக்கு களம் என்பதே சரியானதாகும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மேற்படி புகார் மனுவின் மீது திருச்சி பெருநகர் மின்பகிர்மான வட்ட குறைதீர் மன்றத்தில் 29.05.2023–ல் விசாரணை மேற்கொள்ள மனுதாருக்கு திருச்சி மின்பகிர்மான வட்ட அலுவலகத்தில் பணிபுரியும் தொழில்நுட்ப உதவியாளரின் 9894209634 என்ற அலைபேசி எண்ணிலிருந்து 26.05.2023–ல் அழைப்பு கடிதம் கிடைக்கப்பெற்றதா என அலைபேசி மூலம் கேட்கப்பட்டதாகவும், மேலும் திருச்சி மின் பகிர்மான வட்ட அலுவலகத்திலிருந்து 23.05.2023ல் மனுதாரருக்கு சாதாரன தபால் மூலம் கடிதம் அனுப்பப்பட்டதாகவும், மனுதாரர் பிரதிநிதியான திரு.ப. ஆனந்தனின் அலைபேசி எண்ணிற்கு 27.05.2023–லும் 29.05.2023–லும் விசாரணை நாள் குறித்து தெரிவிக்கப்பட்டதாகவும், இதனை மனுதாரரின் பிரதிநிதியான திரு.ப. ஆனந்தன் அவர்களும் தன்னுடைய மேல்முறையீட்டுக்கான விளக்க கடிதத்தில் ஒத்துக்கொண்டுள்ளார் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். முதன் முதலில் மனுதாரர் திருமதி. வெ.சிவபாக்கியம், வீட்டு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பிக்கும் போதே மனுதாரரின் பிரதிநிதியான திரு.ப.ஆனந்தன் அவர்களின் அலைபேசி எண்ணான 9865509142 குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 திருச்சி மின்பகிர்மான வட்ட மின் நுகர்வோர் குறைதீர் மன்ற அலுவலகம் மூலம் 29.05.2023–ல் நடைபெற்ற விசாரணைக்கு கடிதம் சாதாரண தபாலிலேயே அனுப்பப்பட்டுள்ளதாகவும், எனவே மனுதாரருக்கு விசாரணையில் கலந்துகொள்ள அனுப்பப்பட்ட கடிதம் கிடைக்கப்பெற்றதை உறுதி செய்ய இயலவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மனுதாரரின் பிரதிநிதியான திரு.ப.ஆனந்தன் அவர்களின் அலைபேசி எண்ணிற்கு பலமுறை 29.05.2023–ல் விசாரணை நடைபெறும் என்பது தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே அழைப்புக்கடிதம் கிடைக்கப்பெறவில்லை என தெரிவித்து விட்டு மனுதாரரின் பிரதிநிதியான திரு.ப.ஆனந்தன் விசாரணையில் கலந்து கொள்ளாமல் விசாரணையை புறக்கணித்து மின் நுகர்வோர் மன்றத்திலிருந்து வெளிநடப்பு செய்து விட்டார் எனவும், மனுதாரரான திருமதி.வெ.சிவபாக்கியம் அவர்கள் 29.05.2023–ல் திருச்சி மின் பகிர்மான வட்ட மின் குறைதீர்ப்பாளர் மன்றத்தில் கலந்து கொள்ளவில்லை என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்வதாக எதிர்மனுதாரர்

தெரிவித்துள்ளார். இதன்மூலம் தன்னுடைய தரப்பு வாதத்தினை மனுதாரரால் திருச்சி மின் பகிர்மான வட்ட குறைதீர் மன்றத்தில் முழுமையாக அளிக்கவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மனுதாரரான திருமதி.வெ.சிவபாக்கியம் அவர்களுக்கு கடந்த 04.10.2021–ல் மதிப்பீட்டுத் தொகை செலுத்துமாறு அறிவிப்புக் கடிதம் பாலக்குறிச்சி உதவி மின் பொறியாளர் அலுவலகத்தில் பணிபுரியும் கம்பியாளர் திரு.சி.தமிழ்ச்செல்வன் மூலமும், பிறகு திரு.ராதாகிருஷ்ணன் கேங்மேன் மூலமும் கடிதம் நேரடியாக சென்று வழங்கப்பட்டபோது, திருமதி.வெ.சிவபாக்கியம் கடிதத்தினை வாங்க மறுத்துவிட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மேற்படி கடிதத்தில் 04.10.2021–க்குப் பதில் 04.10.2020 என தவறாக கணினியில் தட்டச்சு செய்யும்போது பிழை ஏற்பட்டுள்ளது எனவும் மேலும் அதே கடிதத்தில் பார்வையில் குறிப்பிடப்பட்ட இடத்தில் விண்ணப்பம் பெறப்பட்ட தேதி 26.08.2021 என குறிட்டப்பட்டுள்ளது என்றும் விண்ணப்பம் பெறப்பட்ட பிறகே, அவ்விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை ஒரு அலுவலரால் எடுக்க இயலும் என்றும் எனவே 26.08.2021–ல் பெறப்பட்ட வீட்டு மின் இணைப்பு விண்ணப்பத்தின் மீது 27.08.2021–ம் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அவ்விண்ணப்பத்தின் மீது மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 09.09.2021–ல் உதவி மின் பொறியாளரால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். இதன்பிறகு கடந்த 04.10.2021–ல் உதவி மின்பொறியாளரால் மதிப்பீட்டுத்தொகை செலுத்த வேண்டி விண்ணப்பதாரருக்கு வழங்கப்பட்ட கடிதத்தினை திருமதி.வெ.சிவபாக்கியம். வாங்க மறுத்ததால் மனுதாரரின் பிரதிநிதியான திரு.ப.ஆனந்தன், உதவி மின்பொறியாளர்/இ.கா/பாலக்குறிச்சி. அலுவலகத்திற்கு நேரடியாகச் சென்று 07.10.2021–ல் கையொப்பமிட்டு பெற்றுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 வீட்டு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பிக்கும் ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இணையதளம் மூலம் கட்டாயமாக பதிவு செய்ய வேண்டும் என்ற நடைமுறை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் 01.03.2020 முதல் அமலாக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு பதிவு செய்யும் பொழுது வின்னப்பதாரரின்

விண்ணப்பத்தின் மீது மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் உடனடியாக விண்ணப்பதாரரின் அலைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி மூலம் தெரியப்படுத்தப்பட்டு வருகிறது என்றும், அவ்வாறே திருமதி.வெ.சிவபாக்கியம் அவர்கள் 26.08.2021–ல் விண்ணப்பம் பதிவு செய்யும்போது அவருடைய பிரதிநிதியான திரு.ப.ஆனந்தன் அவர்களின் எண்ணிற்கு குறுஞ்செய்தி அனுப்பப்பட்டு விண்ணப்ப பதிவு எண்ணும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 ஆனால் மனுதாரரின் பிரதிநிதியான திரு.ப.ஆனந்தன், விண்ணப்ப பதிவு எண்ணும் கடிதம் அனுப்பப்பட்ட தேதியிலும் குறிப்பிடப்பட்ட தட்டச்சு பிழையை காரணம் காட்டி மதிப்பீட்டுத் தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கவேண்டும் என தொடர்ந்து புகார்மனு அளித்த வண்ணம் உள்ளார் என்பதையும் மாநில குறைதீர்ப்பாளர் மன்றத்திற்கு பணிந்து தெரிவித்துக்கொள்வதாக அவர் தெரிவித்துள்ளார். மேலும் மனுதாரர் மதிப்பீட்டுத் தொகை செலுத்தத் தவறியதால் 12:04.2022–ல் விண்ணப்பம் தள்ளுபடி செய்யட்டட்டுள்ளதாகவும், அதன் பிறகு கடந்த 10.05.2022ல் மனுதாரரால் அனுப்பப்பட்ட புகார் மனுவிற்கு உதவி மின்பொறியாளர்/இ.கா/பாலக்குறிச்சி அவர்களால் கடந்த 23.05.2022–ல் பதில் தரப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 மனுதாரரின் பிரதிநிதியான திரு.ப.ஆனந்தன், திருச்சி மின் பகிர்மான வட்ட குறைதீர் மன்றத்தில் நடைபெற்ற விசாரணையில் கலந்து கொண்டு, உடனடியாக வெளிநடப்பு செய்துவிட்டு குறைதீர் மன்ற விசாரணையில் தனக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பினை முறையாக பயன்படுத்தாமல் எதிர்மனுதாரர் தெரிவித்த விவரங்களையும் முழுமையாக தெரிந்து கொள்ளாமல் சென்று விட்டதாகவும், மனுதாரரின் 26.08.2021 வீட்டு மின் இணைப்பு விண்ணப்பத்தின் மீது சம்பந்தப்பட்ட பாலக்குறிச்சி உதவி மின் பொறியாளரால் 27.08.2021–ல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மதிப்பீடு உடனடியாக தயாரிக்கப்பட்டு, 09.09.2021–ல் அனுமதி அளிக்கப்பட்டு மதிப்பீட்டுத் தொகை செலுத்த வேண்டி 04.10.2021–ல் விண்ணப்பதாரருக்கு முறையாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.10 அதனை கடந்த 07.10.2021–ல் விண்ணப்பதாரரின் பிரதிநிதியான திரு. ப. ஆனந்தன் அவர்கள் பாலக்குறிச்சி மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக

அலுவலகத்திற்கு நேரடியாக சென்று பெற்றுக் கொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ.16,208/-ஐ செலுத்தாத காரணத்தால் அவ்விண்ணப்பமானது கடந்த 12.04.2022 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகவும், விண்ணப்பதாரர் திருமதி.வெ.சிவபாக்கியம் வீட்டு மின் இணைப்பு வேண்டி மீண்டும் புதிதாக விண்ணப்பிக்கும் பட்சத்தில் அவருக்கு உடனடியாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக விதிகளின்படி மின் இணைப்பு வழங்கப்படும் எனவும், மனுதாரர் வீட்டு மின் இணைப்புப் பெற ஏற்கனவே செலுத்திய ரூ.2,900/- (ரூபாய் இரண்டாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) விண்ணப்பதாரருக்கு வழங்கப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் திருமதி V. சிவபாக்கியம், கதவு எண் 4/323, வடக்கு களம், சொக்கம்பட்டி, அயன்பொருவாய் கிராமம், மருங்காபுரி தாலுக்கா, திருச்சி மாவட்டம் என்ற முகவரியில் வசிப்பதாகவும் தனது வீட்டிற்கு மின் இணைப்பு கோரி 26.08.2021-இல் இணையதளம் மூலம் விண்ணப்பம் பதிவு செய்து விண்ணப்பப் பதிவு எண் 200062540821341, விண்ணப்பக் கட்டணம் ரூ.3,018/- செலுத்திய நிலையில் மின் இணைப்பு பெற மதிப்பீட்டுத் தொகை ரூ.16,208/- செலுத்துமாறு 19.09.2021 அன்று அலைபேசி எண்ணுக்கு குறுஞ்செய்தி பெறப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 அச்சமயம் கொரோனா முதல் அலை காரணமாக வேலையில்லாததால் மதிப்பீட்டுத்தொகை செலுத்த கால தாமதமான நிலையில் 04.10.2021 (தவறுதலாக 04.10.2020) நாளிட்ட கடிதத்தில் 15 தினங்களுக்குள் மதிப்பீட்டுத்தொகை ரூ. 16,208/-யை செலுத்த வேண்டும் எனவும் செலுத்த தவறும் பட்சத்தில் விண்ணப்பப் பதிவு ரத்து செய்யப்படும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும், மேலும், மதிப்பீட்டுத் தொகை செலுத்துமாறு வழங்கிய அறிவிப்பு கடிதத்தில் விண்ணப்பப்பதிவு எண் 2540821341-

க்கு பதிலாக தவறுதலாக 254082134 என குறிப்பிடப்பட்டிருந்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 அதனை தொடர்ந்து மதிப்பீட்டுத் தொகை செலுத்த பாலக்குறிச்சியில் உள்ள இ–சேவை மையத்திற்கு சென்ற போது விண்ணப்பப்பதிவு எண்ணை சரி பார்க்கவும் என கூறியதாகவும், கொரோனா காரணமாக பாலக்குறிச்சிக்கு சென்று வர இயலாத நிலையில் மதிப்பீட்டுத்தொகையினை செலுத்த கால தாமதம் ஏற்பட்ட நிலையில் 12.04.2022 அன்று தன்னுடைய விண்ணப்பம் ரத்து செய்யப்படுவதாக அலைபேசிக்கு குறுஞ்செய்தி வரப்பெற்றதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.5 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் 26.08.2021–ல் மேல்முறையீட்டாளரிடமிருந்து பெறப்பட்ட வீட்டு மின் இணைப்பு விண்ணப்பத்தின் மீது 27.08.2021–இல் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அவ்விண்ணப்பத்தின் மீது மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 09.09.2021–இல் உதவி மின் பொறியாளரால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இதன்பிறகு கடந்த 04.10.2021–இல் உதவி மின்பொறியாளரால் மதிப்பீட்டுத் தொகை செலுத்த வேண்டி விண்ணப்பதாரருக்கு வழங்கப்பட்ட கடிதத்தினை திருமதி.வெ.சிவபாக்கியம் வாங்க மறுத்ததால் மேல்முறையீட்டாளரின் பிரதிநிதியான திரு.ப.ஆனந்தன், உதவி மின்பொறியாளர்/இ.கா/ பாலக்குறிச்சி அலுவலகத்திற்கு நேரடியாகச் சென்று 07.10.2021–இல் கையொப்பமிட்டு பெற்றுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 மேல்முறையீட்டாளரின் வீட்டு மின் இணைப்பு விண்ணப்பத்தின் மீது சம்பந்தப்பட்ட பாலக்குறிச்சி உதவி மின் பொறியாளரால் 27.08.2021–இல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மதிப்பீடு உடனடியாக தயாரிக்கப்பட்டு, 09.09.2021–இல் அனுமதி அளிக்கப்பட்டு மதிப்பீட்டுத் தொகை செலுத்த வேண்டி 04.10.2021–இல் விண்ணப்பதாரருக்கு முறையாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், மதிப்பீட்டுத் தொகையான ரூ.16,208/–ஐ செலுத்தாத காரணத்தால் அவ்விண்ணப்பமானது கடந்த 12.04.2022 அன்று தள்ளுடி செய்யப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 மதிப்பீட்டுத் தொகை செலுத்த கோரப்பட்ட கடிதத்தில் விண்ணப்ப பதிவு எண் தவறுதலாக குறிப்பிடப்பட்டதாலேயே மதிப்பீட்டுத் தொகை செலுத்த காலதாமதம்

ஏற்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். இருப்பினும் வீட்டு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பிக்கும் ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இணையதளம் மூலம் கட்டாயமாக பதிவு செய்ய வேண்டும் என்ற நடைமுறை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் 01.03.2020 முதல் அமலாக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு பதிவு செய்யும் பொழுது வின்ணப்பதாரரின் வின்ணப்பத்தின் மீது மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் உடனடியாக விண்ணப்பதாரரின் அலைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி மூலம் தெரியப்படுத்தப்பட்டு வருகிறது என்றும், அவ்வாறே திருமதி.வெ.சிவபாக்கியம் அவர்கள் 26.08.2021–இல் விண்ணப்பம் பதிவு செய்யும்போது அவருடைய பிரதிநிதியான திரு.ப.ஆனந்தன் அவர்களின் எண்ணிற்கு குறுஞ்செய்தி அனுப்பப்பட்டு விண்ணப்ப பதிவு எண்ணும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். எனவே, அறிவிப்பு கடிதத்தில் விண்ணப்ப பதிவு எண் தவறுதலாக குறிப்பிட்டதாலேயே மதிப்பீட்டு தொகையை செலுத்த கால தாமதம் ஏற்பட்டதாக கூறும் மேல்முறையீட்டாளரின் வாதம் ஏற்புடையதாக இல்லை என தெரிவித்துள்ளார்.

7.8 எனவே, மேல்முறையீட்டாளர் திருமதி.வெ.சிவபாக்கியம் வீட்டு மின் இணைப்பு வேண்டி மீண்டும் புதிதாக விண்ணப்பிக்கும் பட்சத்தில் அவருக்கு உடனடியாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக விதிகளின்படி மின் இணைப்பு வழங்கப்படும் எனவும், மனுதாரர் வீட்டு மின் இணைப்புப் பெற ஏற்கனவே செலுத்திய ரூ.2,900/– (ரூபாய் இரண்டாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) விண்ணப்பதாருக்கு வழங்கப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.9 மேற்கூறிய வாதி பிரதி வாதங்களை ஆராயும் பொழுது மேல்முறையிட்டாளர் விண்ணப்பம் பதிவு செய்யும் போது அதன் பதிவு எண்.2540821341 என்பது தெரிய வருகிறது. மேற்கூறிய விண்ணப்ப எண் மேல்முறையிட்டாளரால் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டவுடன் 26–08–2021 குறுஞ்செய்தி மூலம் பதிவு செய்யப்பட்ட அலைப்பேசிக்கு சென்றதும் தெரிய வருகிறது. அதன் பின்பு கள ஆய்வு செய்து minor extension typeல் வருவதால் 04–10–2021 என்ற கடிதத்தில் 04–10–2020 என்று தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்ட கடிதத்தில் பதிவு எண்.254082134 என்று தவறுதலாக அனுப்பபட்டதும். அக்கடிதத்தை மேல்முறையீட்டாளரின் பிரதிநிதியான

திரு.ப.ஆனந்தன் அவர்கள் 07-10-2021 அன்று நேரில் பெற்று கொண்டதும் தெரிய வருகிறது.

7.10 மேலும் மேல்முறையீட்டாளர் minor extension ஆன திட்ட மதிப்பீட்டை குறித்த காலத்தில் கட்ட இயலாது என்று முறையிட்டதும் 13-10-2021 கடிதம் மூலம் தெரிவித்த நிலையில் எதிர்மனுதாரர் 25-11-2021இல் மீண்டும் மதிப்பீட்டு தொகை கட்ட வலியுறுத்தியதும் தெரிய வருகிறது. ஆனால் மேல்முறையீட்டாளர் minor extension மூலம் குறித்த 15 நாட்களுக்குள் கட்டவில்லை என்பதும் எதிர்மனுதாரர் நேரில் சென்று வலியுறுத்தியும் மேல்முறையீட்டாளர் 04-10-2020 என்ற தவறான எழுத்து பிழை கடிதம் 07-10-2021ல் பெறப்பட்டதினால் தன்னால் திட்ட மதிப்பீட்டு பணம் கட்ட அரசு உதவி பெற இயலவில்லை என தெரிவித்துள்ளார். தட்டச்சு பிழையால் தன்னால் திட்ட மதிப்பீட்டு பணம் கட்ட இயலவில்லை என்ற மேல்முறையீட்டாளரின் பொதுவான வாதத்தின் மூலம் குறிப்பிட்ட 15 நாட்களுக்குள் பணம் செலுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டதா என்று அறிய இயலவில்லை. மேலும், எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளர் விண்ணப்பத்தை 12-04-2022 அன்றுதான் அதாவது கிட்டதட்ட ஆறு மாதம் கழித்து ரத்து செய்துள்ளதை கவனத்தில் கொண்டால் மேல்முறையீட்டாளருக்கு போதுமான காலஅவகாசம் உள்ளதை அறியமுடிகிறது.

7.11 மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரையின் போது மேல்முறையீட்டாளர், எதிர்மனுதாரர் கோரும் திட்ட மதிப்பீட்டு கட்டணத்தை செலுத்துவதற்கு தனக்கு பொருளாதார வசதியில்லையென்பதால், தன்னுடைய வீட்டிற்கு வரும் service wire மற்றும் மின்னளவி பொருத்துவதற்கான கட்டமைப்பை விரிவாக்கம் இல்லாத அளவிற்கு மாற்று வழிதடத்தில் அமைத்து தருவதாக தெரிவித்தார். எதிர்மனுதாரரும் அவ்வாறு மாற்று வழித்தடம் அமைத்து புதியதாக விண்ணப்பிக்கும் நேர்வில் மேல்முறையீட்டாளரின் வளாகத்தை ஆய்வு செய்து (minor extension) தேவைப்படாத நேர்வில் திட்ட மதிப்பீடின்றி mere service-ல் மின்னிணைப்பு வழங்கப்படும் என உறுதியளித்தார்.

7.12 எனவே புதிய மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் விண்ணப்பிக்குமாறும், அவ்வாறு விண்ணப்பிக்கும் பட்சத்தில் அதன் மீது நடைமுறையில் உள்ள மின்வாரிய விதிமுறையின் படி உரிய நடவடிக்கை எடுத்து புதிய

மின் இணைப்பு வழங்குமாறு எதிர்மனுதாரருக்கு உத்திரவிடப்படுகிறது. மேலும் எதிர்மனுதாரர் இனி வரும் காலங்களில் தட்டச்சு, எழுத்து பிழை போன்றவற்றை தவிர்த்து மிக கவனமாக செயல்பட அறிவுறுத்தப்படுகிறது.

7.13 மேல்முறையீட்டாளரின் மனுவில் காலதாமதத்திற்கு உரிய இழப்பீடு தொகை வழங்குமாறும் கோரியுள்ளார். இது சம்பந்தமாக நான் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின் குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 7(11)ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"(7) குறைமுறையீடு, சட்டத்தின் 57 (1) வது பிரிவின்படி, ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள உரிமதாரர் கடைப்பிடிக்க வேண்டிய செயல்திறன் அளவுகளில் நுகர்வோர் சேவைத்திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என கண்டறிந்தால், நுகர்வோர் இழப்பீட்டுத் தொகை பெற தகுதியுள்ளவர் என முடிவு செய்யலாம். மேலும், நுகர்வோர் சம்மதித்தால், ஆணையத்தால் இது சம்பந்தமாக வகுக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிட்டுள்ள இழப்பீட்டுத் தொகையைப் பெற ஒத்துக் கொள்ளலாம் என அறிவிக்கலாம்."*

7.14 மேற்கண்ட விதியை கூர்ந்து பார்க்கும் பொழுது நாம் அறிவது ஒழுங்குமுறை ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள செயல்திறன் அளவுகளில் நுகர்வோரின் சேவைத்திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என கண்டறிந்தால் நுகர்வோர் இழப்பீட்டு தொகையை பெறுவதற்கு தகுதியானவர் என்று முடிவு செய்யலாம் என்று தெரிகிறது. மேலும், ஆணையம், நிர்ணயித்துள்ள செயல்திறன் அளவுகளை உரிமதாரர் கடைபிடிக்காமல் இருந்தால் வழங்கப்படும் இழப்பீட்டு தொகையை தவிர வேறு நஷ்டஈடு வழங்குவதற்கு மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளில் வழி இல்லை என்று தெரிகிறது.

7.15 இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர் மதிப்பீட்டுத் தொகை செலுத்தாத காரணத்தினால்தான் புதிய வீட்டு மின் இணைப்பிற்கான விண்ணப்பம் எதிர்மனுதாரரால் ரத்து செய்யப்பட்டுள்ளது. எனவே, இதில் சேவை குறைபாடு இல்லை என்பதால் மேல்முறையீட்டாளரின் இழப்பீடு கோரிக்கை நிராகரிக்கப்படுகின்றது.

8.0 <u>முடிவுரை</u>:

8.1 மேல்முறையீட்டாளர் மின் பலகை பொருத்துவதற்கான மாற்று இடத்தை தேர்வு செய்து புதிய மின்இணைப்பிற்கான விண்ணப்பத்தினை அளிக்கும் நேர்வில் புதிய மின் இணைப்பு வழங்குமாறு உத்திரவிடப்படுகிறது. மேலும், எதிர்மனுதாரர் ஏற்கனவே ரத்து செய்யப்பட்ட மேல்முறையீட்டாளரின் விண்ணப்பதில் நிலுவையில் உள்ள தொகையை திரும்பி வழங்கிய பின்பு அதன் மீது நடவடிக்கை குறித்த அறிக்கை இவ்வலுவலத்திற்கு 15 தினங்களுக்குள் சமர்பிக்குமாறு உத்திரவிடப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 64/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திருமதி V. சிவபாக்கியம், <u>BY RPAD</u>
க/பெ. வெள்ளைசாமி,
க,எண். 4/323, வடக்கு களம்,
சொக்கம்பட்டி, அயன்பொருவாய்,
திருச்சி மாவட்டம் – 631 308.

2. செயற்பொறியாளர்/ இ&கா/ மணப்பாறை,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
729, 4, மணப்பாறைப்பட்டி ரோடு, மணப்பாறை அஞ்சல்,
மணப்பாறை, திருச்சி – 621 306.

3. உதவி செயற்பொறியாளர்/ இ&கா / துவரங்குறிச்சி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV துவரங்குறிச்சி SS, மணப்பாறை ரோடு,
துலுக்கம்பட்டி, துவரங்குறிச்சி, திருச்சி – 621 314.

4. உதவி மின்பொறியாளர்/ இ&கா / பாலக்குறிச்சி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
7/70, வடக்கு தெரு, பாலக்குறிச்சி,
மணப்பாறை, திருச்சி – 621 308.

5. **மேற்பார்வை பொறியாளர்,** – By email
**திருச்சி** மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மன்னார்புரம் மெயின் ரோடு, திருச்சி – **620 020.**

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
**144**, அண்ணாசாலை, சென்னை – **600 002.**

7. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
**4**வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – **600 032.**

8. உதவி இயக்குநர் (கணினி) – **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
**4**வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – **600 032.**